# நீலகேசியில் அருக வழிபாடு

**உ. அலிபாவா**
*தலைவர், தமிழியல்துறை*
*பாரதிதாசன் பல்கலைக்கழகம்*
*திருச்சிராப்பள்ளி*

சமணர்களின் மெய்யியலை விளக்கும் தருக்க நூலான நீலகேசி ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்பௌத்த நூலான குண்டலகேசியை மறுப்பதற்காகத் தோன்றிய எதிர்நூலே நீலகேசி. இந்நூலில் 10 சருக்கங்களும் 894 பாடல்களும் உள்ளன. 1936ஆம் ஆண்டு அ. சக்கரவர்த்திநயினாரால் முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்ட நீலகேசியில் அருக வழிபாட்டைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. நீலகேசி சமணசமய மெய்யியலோடு அருக வழிபாட்டையும் எடுத்துரைக்கின்றது.

**சமணசமயத்தில் இறையும் அருகனும்**

சமணசமயம் உலகப் படைப்புக்கொள்கையை மறுப்பதுடன் உலகம் எப்பொழுதும் அழியாதது நிலைபெற்றிருப்பது என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. எனவே உலகத்தைப் படைக்கக் கடவுள் தேவையில்லை என்று சமணசமயம் கருதுகின்றது. அதனால் சமணசமயம் வலியுறுத்தும் அருகனுக்கும் பிற சமயங்கள் வலியுறுத்தும் இறைக்கும் பெரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. சமணசமயம் வினைக்கொள்கையை மிக உறுதியாகக் கடைப்பிடிக்கின்றது. எனவே வினைக்கொள்கையை மையமிட்டே அருகனின் முதன்மையைச் சமணசமயம் நிறுவுகின்றது. சமண சமயம் அருகனைத் தீர்த்தங்கரர் என்று குறிப்பிடுகின்றது. 'தீர்த்தங்கரர் என்பதற்குக் கடலைக் கடக்கும் வழியைக் கண்டறிந்தவர் என்று பொருள்' (அசிம் குமார் ராய் 1984:3). பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்கு வினைகள் அழிக்கப்பட வேண்டும். அவ்வினைகளை அழிப்பதற்குரிய வழியைக் கண்டறிந்த அருகனையே சமணர்கள் இறையாக ஏற்று வழிபடுகின்றனர். எனவே சமணர்களின் இறைபக்தி அருகபக்தியாக வெளிப்படுகின்றது.

சமணர்கள் ஆதிநாதர் தொடங்கி மகாவீரர் வரையிலான இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களை அருகனாக வழிபடுகின்றனர். அவற்றுள் இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான மகாவீரரை மிக முதன்மையான தீர்த்தங்கரராகச் சமணர்கள் எண்ணுகின்றனர். மகாவீரரைப் பற்றிய தெளிவான வரலாறு கிடைக்கவில்லை. அவர் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகின்றது. எனினும் அவரின் வரலாறு பற்றிச் சமணப் பிரிவினரான திகம்பரர்களுக்கும் (ஆடை அணியாதவர்கள்) சுவேதம்பரர்களுக்கும் (வெண்ணிற ஆடையை அணிபவர்கள்) இடையே கருத்து முரண்பாடு காணப்படுகின்றது. மகாவீரர் ஐந்துபுலன்களையும் வென்று வீரர்களுக்கெல்லாம் வீரராகத் திகழ்ந்தவர். இதனை நீலகேசி,

**வீரர்தம் வீரர்க்கும் வீரா (நீல. 154)**

என்று புகழ்கின்றது. மகாவீரர் ஐம்புலன்களை வென்று வீரனாக விளங்கியவர் என்பதை,

**புலன்ஐந்தும் வென்றார்கண் வீரமே வீரம்**

என்று சமணம் குறிப்பிடுகினறது. அதனால்தான் ஐம்புலன்களையும் வென்று வீரத்தோடு விளங்கிய இருபத்து நான்காம் தீர்த்தரங்கரர் மகாவீரர் என்று அழைக்கப்பட்டார். மகாவீரரின் கொள்கைகளைப் பின்பற்றுபவரே பிறவி என்னும் பெருங்கடலை நீந்த முடியும் இதனை,

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார் (குறள். 10)**

என வள்ளுவரும் வலியுறுத்துகின்றார்.

**நீலகேசியும் அருகனும்**

நீலகேசி சமணர்களின் அருகபக்தியை மிகநுட்பமாக வெளிப்படுத்துகின்றது. இது சமண மெய்யியலை அருகனை மையமிட்டே விளக்குகின்றது. இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாடல் அருகனின் இயல்பை விளக்கும் மிக முதன்மையான பாடலாக அமைகின்றது. சமயமெய்யியலை விளக்கப் புகுந்த நீலகேசி,

**காட்சி வகைதான் கடவுள் முதலாய**
**மாட்சி யமைந்தபொருள் எட்டும் மனத்துவைத்து**
**மீட்சி யிலதாய் விரிந்துந்திய இன்பவெள்ள**
**வேட்கை யதுவாம் தெளிவு என்றனர் வென்றவரே** (நீல. 121)

என்று கடவுளை முதலாகக்கொண்ட எட்டினையே மனத்தில் இருத்தவேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இங்குக் காட்சியை வலியுறுத்தும் நீலகேசி, கடவுளாகிய அருகனையே முதலாகக் கொண்ட எட்டுப்பொருள்கள் பற்றி விளக்குகிறது. இது குறிப்பிடத்தக்கது. கடவுளாகிய அருகனின் இயல்புகளை,

**நல்லார் வணங்கப் படுவான்பிறப் பாதிநான்கும்**
**இல்லான் உயிர்கட்கு இடர்தீர்த்துய ரின்பமாக்கும்**
**சொல்லான் தருமச் சுடரான்எனும் தொன்மையினான்**
**எல்லாம் உணர்ந்தான் அவனேஇறை யாகஏத்தி** (நீல. 1)

என்று நீலகேசி விளக்குகின்றது. இப்பாடலில்,

1. நல்லவர்களால் வணங்கப்படுபவன்.
2. பிறப்பை முதலாகக் கொண்ட நால்வகைத் துன்பங்களில் இருந்து விடுபட்டவன்.
3. அனைத்து உயிர்களுக்கும் துன்பத்தைப் போக்கி உயரிய நல்லின்பத்தை அளிக்கக் கூடிய திருமொழியை (ஆகமத்தை) உடையவன்.
4. தொன்மை வாய்ந்த அறத்தின் ஒளியை உடையவன்; மூவுலகங்களிலும் முக்காலங்களிலும் நடக்கும் நிகழ்வுகளை ஒரே நேரத்தில் முழுவதும் உணரும் ஆற்றலைப் பெற்றவன்.

எனும் அருகனின் இயல்புகள் பெறப்படுகின்றன. இவ்வாறு அருகனின் இயல்புகளைக் கடவுள் வாழ்த்தில் விளக்கும் நீலகேசி அதன் விளக்கத்தைக் காப்பியத்தின் பல்வேறு இடங்களில் குறிப்பிடுகின்றது. அதனை அறிதற்பொருட்டு கடவுள்வாழ்த்தில் விளக்கும் அருகனின் இயல்புகள் விரிவாக ஆராயப்படுகின்றன.

**நல்லாரால் வணங்கப்படும் அருகன்**

நல்லாரால் வணங்கப்படுவான்' என்ற தொடருக்குச் சமய திவாகர வாமன முனிவர் கடவுள் வாழ்த்திலுள்ள (அ. சக்கரவர்த்தி நயினார் 1984:1), 'நல்லாரால் வணங்கப்படுவான் என்பது ரிஷீந்திர, சுரேந்திர, நரேந்திராதிகளால் உலகிற்கொரு பெருந்தெய்வதை நீயென்று நமஸ்காரஞ் செய்யப் படுவான் என்றவாறு' என்று உரை வகுக்கின்றார். இப்பகுதியில் விளக்கப்படும் ரிஷீந்திர, சுரேந்திர, நரேந்திரர் முறையே துறவோர், அமரர், இல்லற நெறி பிறழாதோர் (பொ.வே. சோமசுந்தரனார் 1973:க) என்று பொருள்படும். எனவே சமணநெறி நல்லோராக ஏற்றுக்கொண்ட தேவர், மக்கள் பற்றிய விளக்கங்களை நீலகேசியின் தரும உரைச்சருக்கத்தில் (நீல. 82-115) விரிவாக விளக்குகின்றது. இதனை மணிமேகலை,

**இந்திரர் தொழப்படும் இறைவனெம் இறைவன்** (மணி. 27:171)

என்று சுட்டுவது குறிப்பிடத்தக்கது. சமய திவாகர வாமன முனிவர் (அ. சக்கரவர்த்தி நயினார் 1984:2-6) நல்லோரால் வணங்கப்படும் இப்பண்பு புத்தன் முதலான பிற சமயத் தலைவர்களுக்கு இல்லை என்று வலியுறுத்திக் குறிப்பிடுகின்றார்.

**பிறப்பு முதலான நால்வகைத் துன்பங்களும் அருகனும்**

சமய திவாகர வாமன முனிவரைப் பின்பற்றிப் பிறப்பாதி நான்கும் இல்லான் என்ற பகுதிக்கு, 'பிறப்பாதி நான்காவன - பிறப்பு, பிணி, மூப்புச் சாக்காடு என்பன. இவையில்லான். எனவே,

இவற்றிற்குக் காரணமாகிய காதிவினைகளைத் துவர நீக்கி அவற்றினின்று நீங்கினான் என்றாராயிற்று. இனி காதி வினைகளாவன - ஞானாவரணீயம், தரிசனாவரணீயம், வேதநீயம், ஆயுஷியம், நாமம், கோத்திரம், அந்தராயம் என்னும் எட்டுமாம்' என்று பொ.வே. சோமசுந்தரனார் (1973:2) உரை வகுக்கின்றார். இப்பகுதியில் பிறப்பை முதலாகக் கொண்ட நான்கு துன்பத்திற்கும் காரணம் வினை என்றும் அவற்றினின்று நீங்க வேண்டும் என்றும் நீலகேசி வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது.

சமணசமயம் அருகக்கடவுளை இறைநிலைக்கு உயர்த்துவதற்குரிய மிக முதன்மையான காரணமாக அமைவது வினை பற்றிய அக்கடவுளின் கொள்கைகளே. எனவே இதனை விளக்கப் புகுந்த நீலகேசி புத்தனின் வினைக்கொள்கையை மறுத்து அருகனின் வினைக்கொள்கையை நிறுவுகின்றது. அதனைச் செய்வதற்குரிய களமாக மொக்கலவாதச்சருக்கத்தைத் தேர்ந்து கொள்கிறது. இப்பகுதியில் நீலகேசி கொடுக்கும் மிக நீண்ட விளக்கம் சமணசமய வினைக் கொள்கையைத் தெளிவுபடுத்திப் பிறப்பாதி நான்கிலிருந்து விடுபட்ட அருகனின் சிறப்பை வெளிக்கொணர்கின்றது.

**உயிர்களின் துன்பம் நீக்கி இன்பம் நல்கும் அருகன்**

'உயிர்கட்கு இடர்தீர்த்து உயர் இன்பம் ஆக்கும் சொல்லான்' என்ற பகுதிக்குச் சமய திவாகர வாமன முனிவர் உரையைப் பின்பற்றிப் பொ.வே. சோமசுந்தரானார் (1973:2), 'உயிர்கட்கு இடர்தீர்த்து உயரின்ப மாக்குஞ் சொல்லான் என்புழி, உயிர் என்றது சிறந்த மக்களைக் குறித்து நின்றது. இடராவன - பொருள், இடம், காலம், பிறப்பு, பாவனை என்னுமிவ்வைந்தானு முண்டாகுந் துயரங்கள். இவற்றைப் பஞ்ச பரிவர்த்தனம் என்ப. உயரின்பம் என்றது வீட்டின்பத்தை. சொல் என்றது ஆகமங்களை' என்று உரை வகுக்கின்றார்.

சமணசமயம் உயிர்களை நரக கதி, விலங்கு கதி, மக்கள் கதி, தேவ கதி என்று நான்காகப் பகுக்கின்றது. இந்நான்கு கதிகளும் படும் துன்பங்களை விரிவாக விளக்குகின்றது. இந்நான்கு கதிகளையும் கீழுலகு, நடுவுலகு, மேலுலகு என்ற மூவுலகுக்குள் சமணசமயம் அடக்குகின்றது (பீ.மு. மன்சூர் 2002:39-40). இதனைத் தனிச்சிறப்புடைய கொள்கையாகத் தருமஉரைச் சருக்கத்தில் நீலகேசி விளக்குகின்றது. சமண சமய மூவுலகம் பற்றிய விளக்கமாகிய பிரபஞ்சவியல் கொள்கையாக இப்பகுதி விரிகின்றது. மேலும் நாற்கதி துன்பங்களிலிருந்து விடுபட அருகனின் சொற்களாகிய ஆகமங்களே துணையாக நிற்கின்றன என்றும் நீலகேசி வலியுறுத்துகின்றது.

**அற ஒளியை உடைய அருகன்**

'தருமச்சுடர் எனும் தொன்மையினான் எல்லாம் உணர்ந்தான்' எனும் அடிகளுக்கு அப்பகுதிக்கு 'உலகின் நிகழும் தீவினையாகிய இருளைக்கடிந்து யாண்டும் நல்வினையே நிகழ்விக்கும் அறத்தைப் பரப்புதலான் அறவொளி ஞாயிறனையான் என்பார் தருமச்சுடரான் என்றார். தொன்மையினான் என்றது ஆதியும் அந்தமும் இன்றி என்றும் நிலையுதலுடையோன் என்றவாறு. எல்லாம் உணர்ந்தான் என்றது - தானும் பிறவுமாகிய பொருளும் அவற்றினியல்பும் ஆக்கமும் ஆகிய எல்லாவற்றையும் கண்கூடாகக் கண்டவன் என்றவாறு. எனவே அங்ஙன முணர்தற்குக் காரணமான கடையிலா அறிவும் கடையிலாக் காட்சியும் கடையிலாவாற்றலும் கடையிலாவின்பமும் உடையான் என்பது போந்தது' என்று உரை வகுக்கின்றார் பொ.வே. சோமசுந்தரனார் (1973:உ).

சமண சமயம் கொல்லாமை முதலிய அறத்தை மிக உறுதியாக வலியுறுத்துகின்றது. மனத்தினால் அறிந்தும் அறியாமலும் எவ்வகைப் பாவங்களையும் செய்யக்கூடாது என்று அது வலியுறுத்துகின்றது. நீலகேசி சமண சமய அறம் எவ்வாறு பௌத்த சமயத்தின் அறத்திலிருந்து மாறுபட்டது என்பதைப் புத்தவாதச்சருக்கத்தில் விரிவாக ஆராய்ந்து நிறுவுகின்றது. இதன்வழி நீலகேசி சமண சமயத்தின் அறச்சிறப்பையும் அதனை அருளிய அருகனின் இயல்புகளையும் விரிவாகப் போற்றுகின்றது. இவ்வாறு கடவுள்வாழ்த்துப்பாடலை மையமிட்டு, நீலகேசி முழுமையையும் பார்ப்பதற்கான இடமிருக்கின்றது.

**நீலகேசியில் ஆகமம் அருளிய அருகன்**

நீலகேசிக் கடவுள்வாழ்த்துப்பாடல் அருகனை ஆகமத்தோடு இணைத்துப் பேசுகின்றது. அதனைத் தனித்து ஆராய்வதற்கும் அருக வழிபாடு பற்றி விளக்குவதற்கும் இப்பாடல் உதவுகிறது. நீலகேசி

அருகன் ஆகமங்களை அருளினான் என்பதை வலியுறுத்துகின்றது. அருகன் வழங்கிய ஆகமம் பரமாகமம் என்று அழைக்கப்படும். அதனை விளக்கும் அஷ்ட பதார்த்த ஸாரம் என்னும் நூல், 'பரமாகமம் மூன்று பிரகாரமாகும். அங்காகமம், பூர்வாகமம், ப்ரகீர்ணாகமமென' என்று குறிப்பிடுகின்றது (அ. சக்கரவர்த்தி நயினார் 1984:373). இம்மூன்று ஆகமங்களையும்,

1. **அங்கம் பயந்தான் (நீல. 660:1)**
2. **பூர்ப்பம் பயந்தான் (நீல. 661:1)**
3. **புலவன் உரைத்த புறக்கேள்வி (நீல. 662:1)**

என்று நீலகேசி குறிப்பிடுவதுடன் இவற்றை அருகன் அருளியதாகவும் எடுத்துரைக்கின்றது. நீலகேசி அங்கம் என்பது அங்காகமத்தையும் பூர்ப்பம் என்பது பூர்ப்பம் என்பது பூர்வாகமத்தையும் புறக்கேள்வி என்பது ப்ரகீர்ணாகமத்தையும் குறிப்பிடுகின்றது என்று சமய திவாகர வாமன முனிவர் குறிப்பிடுகின்றார்.

அருகன் அருளிய ஆகமத்தைப் போற்றும் நீலகேசி சமணர்களின் தருக்கத்தில் ஆகம அளவையையும் சேர்த்து விடுகின்றது. ஆனால் பௌத்தம் ஆகம அளவையை ஏற்கவில்லை. எனவே பௌத்தத்திற்கு எதிரான கடுமையான உரையாடலை நீலகேசி முன்வைக்கின்றது. அதேபோல நீலகேசி சமணசமய அளவையியலை, சமணர்களின் வீடுபேற்று நெறியோடு இணைத்து விளக்குவதும் சுட்டத்தக்கது. காட்சி அளவையை நீலகேசி,

**காண்டலும் அல்லதே அளவை காண்டல்முன்**
**பூண்டஐம் பொறிமனம் அவதி புண்ணியம்**
**மாண்தரு மனப்பரி யாயம் கேவல**
**நாண்தரும் அரிவையர் உருவ நண்ணினாய் (நீல. 118)**

என்ற பாடலில் விளக்குகின்றது. இப்பாடலில் நீலகேசி காட்சி அளவையின் ஐந்து வகைகளை,

1. முன்செய்த பழவினையால் அமைந்த ஐம்பொறிகளால் அறிதல்
2. மனத்தால் அறிதல்
3. அவதி ஞானத்தால் அறிதல்
4. நல்வினையின் பயனாய் எய்திய மனப்பரியாய ஞானத்தால் அறிதல்
5. கேவல ஞானத்தால் அறிதல்

எனப் பகுத்துக்காட்டுகின்றது. இவ்வைந்து வகைகளும் சமணசமயம் விளக்கும் வீடுபேற்று நெறிக்குரிய படிகளாக அமைகின்றன (எஸ்.என். தாஸ்குப்தா 1969:201). எனவே நீலகேசி அருகனையும் அருகன் அருளிய ஆகமத்தையும் மையமிட்டே அளவையியலையும் அமைத்துள்ளது என்பது புலப்படுகின்றது.

**அருக வழிபாடு**

அருக வழிபாடு நீலகேசியின் கடவுள்வாழ்த்துப் பாடலில் மட்டுமன்றி குண்டலகேசி வாதச் சருக்கத்திலும் (நீல. 153-162) ஆசீவகவாதச் சருக்கத்திலும் (நீல. 660-665) அமைந்துள்ளது. அவற்றுள் அருக வழிபாடு நிகழ்த்தப் பெற்ற முறை பற்றி நீலகேசி,

**பதூமம் சாந்தொடு சுண்ணம் துதியோடு பரவுப தொழுதே**
**தாமம் தாழ்தர நாற்றித் தத்துவ தரிசிய துருவே**
**யாமென் றையென வியந்தாங் கன்ன வாயிரத் தோரெண்**
**ணாம நன்னிசை தொடுத்து நாதகீ தங்களை நவிற்றும் (நீல. 153)**

என்ற பாடலில் சுட்டுகின்றது. இப்பாடல் 'நறும்புகை கொடுத்தும் சாந்துத் தெளித்தும் வாழ்த்துப் பாடல் பாடியும் புகழ்ந்து கைகுவித்து வணங்கியும் மலர்மாலைகளை நிலத்திற்றோயும்படி தொங்க விட்டும் இறைவன் திருவுருவத்தைக் கூர்ந்து நோக்கி, ஆ! இத்திருவுருவம் மெய்க்காட்சியாளனுடைய திருவுருவமே என்று கூறி ஐஇ! என்று வியந்து அவ்விறைவனுடையனவாகிய ஆயிரத்து எட்டுத் திருப்பெயர்களால் இயன்ற நல்ல இசைப்பாடலை இயற்றி அவற்றை இனிய பண்களோடு இனிமையாக நீலகேசி பாடினாள்' (பொ.வே. சோம சுந்தரனார் 1973:ககள-கஅக) என்று விளக்குகிறது. இதன்மூலம் நீலகேசி காலத்தில் மலர்மாலை சூட்டி, பாடல்பாடி வாழ்த்தி வழிபடும் அளவிற்கு அருக

வழிபாடு வளர்ந்துள்ளது என்பது தெளிவாகின்றது; சமணர்கள் அருகனுக்குக் கொடுத்த முதன்மை விளக்கமடைகின்றது.

சமண சமயம் அருகனுக்கு மிக முதன்மையான இடத்தை வழங்குகின்றது. அது நீலகேசியில் வெளிப்படுகின்றது. நீலகேசிக் கடவுள்வாழ்த்தில் விளக்கப்படும் அருகனின் இயல்புகள் நீலகேசி முழுமையும் விளக்கப்படும் அருகன் பற்றிய செய்திகளின் சுருக்கமாக அமைகின்றது. இதனை வெளிப்படுத்தும் சமய திவாகர வாமன முனிவரின் உரை மிக நீண்டதாகவும் அருகனைப் புத்தனோடு ஒப்பிட்டு ஆய்வதாகவும் அமைகின்றது. ஆனால் நீலகேசியின் கடவுள் வாழ்த்துப்பாடல் சமண சமய மெய்யியலை மிக நுட்பமாக அருகனை மையமிட்டே கட்டமைத்துள்ளது.

நீலகேசி கடவுள் வாழ்த்துச் செய்யுள் மட்டுமன்றி குண்டலகேசி வாதச்சருக்கத்திலும் (நீல. 153 - 162) ஆசீவக வாதச்சருக்கத்திலும் (நீல. 660-665) அருகவழிபாட்டைக் குறிப்பிடுகின்றது. அதன்வழி அருகவழிபாடு நீலகேசி காலத்தில் மிக உயர்ந்த நிலையை அடைந்திருந்தது என்பதும் அருக பக்தியை நீலகேசி வலியுறுத்துகின்றது என்பதும் வெள்ளிடைமலை.

**துணைநூல் பட்டியல்**

1. சக்கரவர்த்தி நயினார் அ. (ப.ஆ.), 1984. நீலகேசி (சமய திவாகர வாமன முனிவர் உரையுடன்), தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 1.
2. சோமசுந்தரனார் பொ.வே. (உ.ஆ.), 1973. நீலகேசி விளக்கவுரை, திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை - 1.
3. மன்சூர் பீ.மு. 2002. நீலகேசியில் சமயக் கோட்பாடுகள், தி பார்க்கர், சென்னை - 14.
4. Ashim Kumar Roy. 1984. A History of The Jains> Gitanjali Publishing House> New Delhi.
5. Surendra Nath Das Gupta. 1969. A History of Indian Philosophy> Vol. I> Cambridge University Press> London.